**2026 ஜனவரி மாதம் 08 – ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 7/2016**

O.S. No.: 7/2016 – மாதவன் PW3 08.01.2026

த/பெ.N.சங்கரலிங்கம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 28ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணை சாட்சியத்தை 10, 15 முதல் 19, 20 முதல் 24, 26, 30, 33, 34 ஆகிய பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்வதுடன் மேலும் 10, 15 முதல் 19, 20 முதல் 24, 26, 30, 33, 34 ஆகிய பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

நான் பிரதிவாதிகள் மீது குற்ற வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதா என்றால் நிலுவையில் உள்ளது. அந்த குற்ற வழக்கின் குறுக்கு விசாரணையில் எனது வீட்டிற்கும், பிரதிவாதிகள் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் 250 மீட்டர் இருக்கும் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கின் குறுக்கு விசாரணையில் பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்ததை 2007ம் ஆண்டில் நான் பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தில் 16ம் பிரதிவாதி கடந்த 08.06.1995ம் தேதி வீட்டடி மனையாக கிரையம் வாங்கியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த குற்ற வழக்கின் குறுக்கு விசாரணையில் 1995ம் ஆண்டே தாவா சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1995–1996ம் ஆண்டுகளில் 15ம் பிரதிவாதி தாவா சொத்தில் வீடு கட்டிவிட்டார் என்று சொன்னால் இல்லை, 2013ம் வருடத்தில் தான் வீடு கட்டினார். பிரதிவாதிகளில் சிலர் 2000ம் வருடத்திற்கு முன்னரே கிரையம் வாங்கியுள்ளார்களா என்றால் 1995ம் வருடம் முதல் கிரையம் வாங்கியுள்ளார்கள். கிரையம் வாங்கிய அந்த சமயத்திலேயே அவர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, 2013ம்

வருடத்திலிருந்து தான் வீடு கட்டினார்கள். தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள வீடுகள் பல லட்சம் மதிப்பு பெறும் என்றால் சரிதான். அந்த கட்டிடங்களை இடித்து தரச்சொல்லி நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்குரையில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் காலியிடமாக தரக்கேட்டுள்ளேன், இடித்து தரவேண்டும் என குறிப்பிட்டு கேட்கவில்லை. தாவா சொத்தில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியிலிருந்து சாலை, மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவை செய்து தந்துள்ளார்கள் என்றால் சரிதான், 2013ம் வருடம் முதல் செய்து கொடுத்துள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. தாவா சொத்தில் பிரதிவாதிகள் வாங்கிய கிரைய பத்திரங்கள் அடிப்படையில் கட்டிடங்களாகவும், வீதியாகவும் அமைத்து வீடுகள் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள கட்டிடங்கள் போக மீத காலியிடம் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, 70 செண்டிற்கு மேல் காலியிடம் உள்ளது. மேற்கூறிய விபரங்களை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நல்லெண்ணத்துடன் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாகம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், அதனடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.01.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.01.08 18:49:02 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
08.01.2026.